<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 353/2021**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
**<u>வாக்குமூலம் – வா.சா.1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளைச்சாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 05.08.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஆகஸ்ட் 05ம் நாள் சாட்சியம்.

---

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய சத்திய பிரமாண வாக்கு மூலத்தை முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். **உத்தேச வரைபடம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 22.04.2018ம் தேதிய தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.128/2018–ல் வாதி பெற்ற இறுதிநிலை தீர்ப்பாணை கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 13.08.2021–ம் தேதிய சர்வே எண்.195/1க்கு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புலப்பட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், பட்டா 352 கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 13.08.2021ம் தேதிய கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அடங்கல் உண்மை நகல்**

**வா.சா.ஆ.5 ஆகவும், 24.02.2020–ம் தேதிய கிஸ்து ரசீது வா.சா.ஆ.6 ஆகவும், மற்றும் ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 மற்றும் வரைபடம் சா.ஆ.2 ஆகவும்** ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை முடிவடைந்தது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.